மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# பூந்தழல் மரபுகவிதைத் தொகுப்பில் சமுதாயத்திற்கான அறிவுரைகள்

# Advices for Society in Collection of Traditional Poems 'Poontazhal'

மேகலாவதி கங்காதரன் / Megalavathi P Gangatharan[1]
[1]Undergraduate Student, Sultan Idris Education University
Corresponding Email: Gmega2517@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பூந்தழல் மரபுகவிதைத் தொகுப்பில் இன்றைய சமுதாயத்திற்குக் கூறவரும் படிப்பினையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். சமுதாயத்தில் வலியுறுத்த வேண்டிய நல்ல சிந்தனைகள், அறக்கருத்துகள், வாழ்வியல் நோக்கங்கள், காதல் உணர்வுகள், மொழிப் பற்று போன்ற பலவகையான அறிவுரைகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளது. இந்த ஆய்வு பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டது. பூந்தழல் மரபுகவிதைத் தொகுப்பில் காணப்படும் கவிதைகளே இந்த ஆய்வின் முதல் நிலை தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இன்றைய சமுதாயம் பின்பற்ற வேண்டிய படிப்பினைகளை மிகவும் தெளிவாக இந்நூலில் இடம் பெறச் செய்துள்ளனர்.
**கருச்சொற்கள்:** பூந்தழல் மரபுகவிதைத் தொகுப்பு, சமுதாயம், படிப்பினைகள்

**Abstract**

The purpose of this article is to teach today's society in Poontzhal's traditional poetry collection. Thoughts, morals, life goals, love feelings, language attachment etc. are shown in this book. This study was carried out in qualitative approach. Poems that can be found in Poontzhal traditional poetry collection have been used as the primary data of this study. It can be known that the lessons to be followed and needed by today's society have been very clearly and beautifully placed in this Poontzhal traditional poetry collection.
**Keywords:** Poontazhal tradition poetry collection, society, lessons

**முன்னுரை**

மனிதன் என்பவன் இன்னொரு மனிதனுடன் சேர்ந்தே வாழுபவன். அப்படிக் கூடிக் கலந்து சேர்ந்து வாழ்ந்ததினாலே சமுதாயம் உருவானது. சமூகப் பொருளாதார அரசியல் ஈடுபாடுகளினால் மட்டுமின்றித் தொடர்புகளினாலும் இம்மனித இனம் என்ற சமுதாயம் இயங்கி வருகின்றது. இப்படி இயங்கி வரும் சமுதாயம் பல பரிணாம வளர்ச்சியையும் மாற்றங்களையும் உலக நடப்புகளுக்கு ஏற்ப செயல்பட்டு வருகின்றது. இந்தச் சமுதாயமானது பல விதிமுறைகளையும் கட்டுபாடுகளையும் பொதுமறைகளையும் உள்ளடக்கியுள்ளது. அறிவுரை என்பது ஒருவர் தமது, சொந்த விருப்பு வெறுப்புகளை அற்று, பிறர் நலன் கருதி தன்னுள் இருக்கும் ஆலோசனையை எந்தவொரு எதிர்பார்ப்புமின்றிப் பிறரிடம் கூறுவதேயாகும். நம் அறிவுக்கு எட்டும் வகையில் பிறர் நம்மிடம் கூறும் ஆலோசனையே அறிவுரை எனப்படும். ஆக, ஒரு சமுதாயம் இயங்குவதற்குப் பல அறிஞர்கள் கூறும் அறிவுரைகள் அச்சமுதாயத்திற்குத் தூண்டுகோலாக அமைகின்றது. அந்த வகையில் மலேசிய கவிஞர் மு. ஆசைத்தம்பி அவர்களால் இயற்றப்பட்ட பூந்தழல் மரபுகவிதைத் தொகுப்புச் சமுதாயத்திற்கு நல்ல அறிவுரைகளை வலியுறுத்துகின்றன.

**தரவுப் பகுப்பாய்வு**

1) அனைவரையும் ஏற்ற தாழ்வின்றிச் சரிசமமாகப் பார்க்க வேண்டும்.

இன்றைய காலக்கட்டதில் தொழில்நுட்ப வளர்ச்சியால் மக்களிடைய பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், மற்றவர்களை ஏற்ற தாழ்வுடன் பார்க்கும் பண்பு மட்டும் இன்றளவும் இருந்து கொண்டுதான் வருகிறது. பணம், பதவி, ஜாதி, இனம், தொழில் வழி மற்றவர்களை ஏற்ற தாழ்வுடன் தான் பார்த்து வருகின்றனர். ஒரே இனமாக இருந்தாலும் அடுத்தவரைத் தரம் பிரித்து காட்டுவது மடமை என்று மு. ஆசைத்தம்பி கூறுகின்றார்.

தாழ்ந்தவர் என்று தமிழரைத் தமிழர்
        தரம்பிரித்(து) ஆள்வது மடமை
சூழ்ந்தவர் எல்லாம் சொற்றமிழ் பேசும்
        சுற்றங்கள் என்றறிந் திடுமின்!
வீழ்ந்தநம் இனத்தை மீண்டெழச் செய்ய
        வேற்றுமைச் சாதியை விடுமின்!
ஆழ்ந்தெவர் அறிந்தார்? ஆறறி விருந்தும்
        ஆய்விலார் பகுத்தறி வில்லார்!

(சாதிச் சங்கம் , பக்கம் 35, குமுகாயம் )

மேற்கண்ட கவிதை வரியின் வழி தமிழர்களுக்குள் தரம் பிரித்துப் பார்ப்பதை மடமை எனவும் நம்மைச் சூழ்ந்து இருப்பவர்கள் நம்மவர்கள் எனும் எண்ணத்தை ஏற்க வேண்டும் என்றும் கவிஞர் வலியுறுத்தியுள்ளார். வீழும் இனத்தை மீண்டு எழச் செய்ய, சாதி வேற்றுமையைத் தவிர்த்து வாழ்பவர்களே நல்ல பகுத்தறிவாளர்கள் என்பதை இந்தக் கவிதை வரிகளில் கவிஞர் கூறியுள்ளார். ஆக, நம்மில் இருக்கும் ஏற்ற தாழ்வுகளை விட்டொழித்துப், பகுத்தறிவுடன் இந்தச் சமுதாயத்தில் ஒன்றிணைந்து செயல்படுவோம்.

2) பகைமை கொண்டிருக்கக் கூடாது

வெறுப்பு, மனக்கசப்பு, விரோதம், பொறாமை போன்றவைகளால் ஒருவருக்கு இன்னொருவர் மீது பகைமை உணர்வு ஏற்படுகிறது. அதுமட்டுமின்றி, அவர்களுடைய எண்ணங்கள் அல்லது கருத்துகள் வேறுபடும் போதும் பகைமை உணர்வு ஏற்படும். இதுபோலப் பகைமையானது பல்வேறு சூழல்களில் நிலவி கொண்டுதான் வருகிறது. சமுதாயம் இந்தப் பகைமையினால் பல்வேறு துன்பங்களைச் சந்திக்க நேரிடும். பகைமையினால் சக வாழ்வு இல்லாமை, பிறரிடமிருந்து விலகுதல், தனிமை ஆகியவை ஏற்படக்கூடும். எடுத்துக்காட்டாகப், பகை உணர்வே பல போர்களுக்கு வித்திட்டது. அது போல, இன்றைய சமுதாயத்தினரிடம் ஏற்படும் சண்டை சச்சரவுகளுக்கும் இப்பகைமை உணர்வே முதன்மை காரணமாக அமைகின்றது. இதைத்தான் மு. ஆசைத்தம்பி

பகைமைநிலை வந்தாலும்
பழிதீர்க்கும் குணம்விட்டுத்
தகைமைநிலை மாறாது
தமிழரென்ற உணர்வோடு
வகையறிந்து செயல்புரிந்தால்,
வையத்தில் நமக்கெதிரே
புகைகிளப்பும் கேடரெல்லாம்
புறமுதுகிட்(டு) ஓடாரோ!

(சீர்கேடு போதுமடா, பக்கம் 37, குமுகாயம்)

என்று எடுத்துரைக்கின்றார். பகைமை உணர்வு வந்தாலும் அதற்குப் பழிதீர்க்கும் குணத்தை விடுத்துவிட்டு, நம்முடைய தரத்தை நிலைநாட்ட வேண்டும். பகைமை நீக்கி வாழ்வதே ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு வித்திடும் எனும் அறிவுரையை இந்தக் கவிதை வரியின் வழி அறிந்து கொள்ள முடிகிறது.

3) சமுதாயத்தில் ஒற்றுமை வேண்டும்

ஒற்றுமை என்பது இந்த உலகில் வாழ்கின்ற அனைத்து உயிரினங்களிற்கும் அவசியம். ஒற்றுமை இல்லையேல் அனைவரும் தாழ்ந்து விடுவர். என்னத்தான் இவ்வுலகில் வாழ்கின்ற மனிதர்கள் இனம், மதம், மொழி எனப் பிரிந்து வாழ்ந்தாலும், ஒற்றுமையாக வாழ்ந்தால் அவர்களுக்கு வரும் இன்னல்களையும் தடைகளையும் சுலபமாக நீக்கலாம் என்றால் அது மிகையாகாது. இதைத் தான் தெய்வப்புலவர் திருவள்ளுவர்,

இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்கும் தன்மை யவர்

என்று ஒற்றுமையின் அவசியத்தை வெளிப்படுத்தி உள்ளார். கவிஞர் அவர்களும் இதையே தனது கவிதை வரிகளில்

ஒருதாயின் பிள்ளைகளாய்
ஒற்றுமையாய் வாழ்ந்திங்கு
வருங்காலத் தலைமுறைக்கு

வழிகாட்ட வேண்டுமன்றிப்
பொருந்தாத மூடர்களாய்ப்
போர்புரிந்து வாழ்ந்திருந்தால்
இருந்தாலும் வெட்கமடா!
இறந்தாலும் ஈனமடா!
(சீர்கேடு போதுமடா, பக்கம் 37, குமுகாயம்)

அஃதாவது ஒற்றுமையாய் வாழ்ந்து நம் வருங்காலத் தலைமுறைக்கு வழிகாட்ட வேண்டுமே தவிர, நம்முள்ளே சண்டையிட்டுக் கொண்டும், பிரிவினையை ஏற்படுத்திக் கொண்டும் வாழக்கூடாது. அம்மாதிரியான வாழ்க்கை முறை வெட்கத்திற்கும் ஈனத்திற்கும் சமம் என்பதை இந்தக் கவிதை வரிகளின் வழி கவிஞர் கூறியுள்ளார். ஆக, சமுதாயத்திற்கு ஒற்றுமைமே அடித்தளம் எனும் அறிவுரையைக் கவிஞர் இங்கு வெளிப்படுத்தியுள்ளார்.

4) தமிழர் பண்பாட்டைக் காக்க வேண்டும்.

பல சிறந்த பண்பாடுகள் உலகின் பல்வேறு நாடுகளில் வளர்ந்துள்ளன. அதில் பல பண்பாடுகள் அழிந்துவிட்டன. தமிழர் பண்பாடு என்பது தொன்றுதொட்டு மரபு காத்து வருவதாகும். அறிவியல் சார்ந்தும் உளவியல் சார்ந்தும் நிகரற்ற கலாச்சாரச் சிந்தனைகளையும் அறிவுரைகளையும் வழிக்காட்டுவது தமிழர் பண்பாடு. இத்துணைச் சிறப்புகளிருக்கும் தமிழர் பண்பாட்டை இன்றைய சமுதாயம் காக்க தவறுவது மிகவும் வேதனையை அளிக்கின்றனது. இதனையே கவிஞர் அவர்கள்,

கண்ணுக்கு விருந்தளிக்கக்
கண்டபடி சேலைகட்டி
மண்ணுக்குள் புதைத்தீரே
மாத்தமிழர் பண்பாட்டை!
(சேலை, பக்கம் 39 , குமுகாயம்)

என்று குறிப்பிட்டுள்ளார். இன்றைய பெண்கள் மேலைநாட்டு மோகத்தால் பண்பாட்டைத் தவறாகப் புரிந்து கொண்டு சேலையை அதற்குரிய பாணியில் அணியாமல் அரைகுறையாக அணிந்து பண்பாட்டுச் சீரழிவிற்குக் காரணமாக அமைகின்றனர். ஆக, தமிழ்ப் பெண்கள் தமிழ்ப் பண்பாட்டைச் சரியாகவும் நேர்த்தியாகவும் பின்பற்றிக் காக்க வேண்டும்.

5) சுயகாலில் நிற்றல் வேண்டும்.

சுயகாலில் நின்று உழைத்தலே நல்ல மனிதனுக்குச் சிறப்பு என்பார்கள். சுயமாய் உழைத்து வாழ்வோரை அகிலம் போற்றும். எப்போதும் மற்றொருவரைச் சார்ந்தோ நம்பியோ நமது வாழ்வை வழிநடத்தக் கூடாது. இன்னொருவரைச் சார்ந்து வாழ்வது நிலையற்றது. அது நமது உடன் பிறப்புகளாக இருந்தாலும் தவறே என்பதைக் கவிஞர் அவர்கள்,

உடன்பிறப்பே உதவியென உனக்குள்ளே எண்ணி,
ஒருநாளும் இருக்காதே உன்னைத்தான் தம்பி!

உடலில்உயிர் இருக்கும்வரை உனக்கேநீ துணையாம்!
உடன்பிறப்பின் உதவியெல்லாம் ஓரெல்லைக் குள்தான்!
(உன்னைத்தான் தம்பி, பக்கம் 84, குமுகாயம்)

அதாவது, நமது உடன்பிறப்புகள் நமக்கு என்றும் உடன் இருப்பார்கள் என எண்ணிவிடக் கூடாது. நமது உடலில் உயிர் உள்ள வரை நாமே நமக்குத் துணை என்று கூறுகின்றார். ஆக, நமக்கு நாமே துணை எனச் சுயகாலில் நின்று வாழ்தல் வேண்டும்.

**நிறைவுரை**

ஒரு சமுதாயம் தனி மனிதனைச் சார்ந்தது அல்ல. இன்றைய சமுதாயம் தனித்து இயங்கக் கூடிய அளவிற்குச் சிந்தனைகளைக் கொண்டிருந்தாலும், ஒரு சில நேரங்களில் அவர்களுக்கு வழிகாட்டிகள் அவசியப்படுகிறது. அந்த வகையில், இப்பூந்தழல் மரபுகவிதை தொகுப்புப்பானது சமுதாயத்திற்குச் சிறந்ததொரு வழிகாட்டியாக அமைகின்றது என்பதை இந்த ஆய்வின் மூலம் கண்டறிய முடிந்தது. சமுதாயம் மென்மேலும் செம்மையடைய எம்மாதிரியான அறக்கருத்துக்களை வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும் என்பதை இந்தக் கவிதை தொகுப்பு எடுத்துரைத்துள்ளது. எனவே, பூந்தழல் மரபுகவிதைத் தொகுப்பானது சமுதாயத்திற்குச் சிறந்ததொரு வழிகாட்டியாக அமைகின்றது என்பது நிரூபணமாகியுள்ளது.

**துணைநூற்பட்டியல்**


Home. (n.d.). YouTube. Retrieved May 2, 2023, from https://rdcu.be/da726

Arsaithamby, M. (2021). Poonthazhal: antolaji tamil kavitaikal. Uma Publications.

Duffy, B., Duncan, S., Beresford, P., González, H., Taylor, S., Mahanty, S., Armstrong, J., Phillips, M., Haslam, N., Lee, J. A., Turchin, P., Flood, M., Curran, T., Wilson, S., & Isdale, W. (n.d.). Society News, Research and Analysis. The Conversation. https://theconversation.com/global/topics/society-5761